# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டு பரீட்சை – 2022

| தரம் - 6 | சைவசமயம் | நேரம்: 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ........................................................................................................

**பகுதி - I**

❖ **பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. ஓம் எனும் பிரணவ மந்திரத்தின் பொருளாய் விளங்குபவர்
1) விநாயகர்  2) முருகன்  3) சிவபெருமான்  4) திருமால்

02. "வெற்றி வேற்கை" எனும் நூலை எழுதியவர்
1) திருஞானசம்பந்தர்  2) அதிவீரராம பாண்டியன்  3) அகத்தியர்  4) பரத முனிவர்

03. தர்மபுத்திரர் செய்த யாகத்தின் பெயர்
1) சோம யாகம்  2) இராஜ சூயம்  3) அஸ்வமேதம்  4) வாஜபோஜம்

04. "மெய்ம்மை" எனும் கதை இடம்பெறும் நூல்
1) ஆத்திசூடி  2) பாலர்பாடம்  3) சிவாலய தரிசனம்  4) சைவபோதினி

05. தனக்கு மேல் தலைவர் இல்லாதவர்
1) விநாயகர்  2) முருகன்  3) கந்தன்  4) சிவன்

06. உணவு உண்ணத் தொடங்கும் முன்பு ஓதவேண்டிய தேவாரம்
1) "பித்தாபிறை சூடி...."  2) "அன்னம்பாலிக்கும்..."
3) "காதலாகிக் கசிந்து....."  4) "இடரினும் தளரினும்....."

07. அகத்தியரின் கமண்டலத்திலிருந்த நீர் எந்த ஆறாகப் பெருக்கெடுத்து ஓடியது?
1) கங்கை  2) யமுனை  3) காவிரி  4) சிந்து

08. "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" எனக் கூறியவர்
1) ஔவையார்  2) விபுலானந்தர்  3) திருவள்ளுவர்  4) திருமூலர்

09. சிவசின்னங்கள் எனப்படுவது
1) சந்தனம், குங்குமம்  2) குங்குமம், காவியாடை
3) விபூதி, உருத்திராக்கம்  4) உருத்திராக்கம், காவியாடை

10. திருநீற்றைப் பரவிப் பூசுதல் எவ்வாறு அழைக்கப்படும்?
1) உருத்திராக்கம்  2) திரிபுண்டரம்  3) திரிபுரம்  4) உத்தூளனம்

11. பஞ்சபுராணம் ஓதும் ஒழுங்குமுறையில் மூன்றாவதாக அமைவது
1) தேவாரம்  2) திருவிசைப்பா  3) திருவாசகம்  4) திருப்பல்லாண்டு

12. திருவிளக்கில் எத்தனை சுடர் ஏற்றுவது சிறந்தது
1) ஒன்று  2) இரண்டு  3) மூன்று  4) ஐந்து

13. விநாயகருக்கு மிகவும் விருப்பமான அர்ச்சனைப் பொருள்
1) பூ  2) இலை  3) பழம்  4) அறுகம்புல்

14. தோப்புக்கரணத்துடன் தொடர்புடைய அசுரன்
1) முயலகன்  2) தாரகாசுரன்  3) சிங்கமுகாசுரன்  4) கஜமுகாசுரன்

15. தருமம் பற்றிக் கூறும் இதிகாச நூல்
1) மகாபாரதம் 2) கம்பராமாயணம் 3) வெற்றிவேற்கை 4) பாலபாடம்

16. பாலபாடம் எனும் நூலை எழுதியவர்
1) அகத்தியர் 2) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் 3) அதிவீரராம பாண்டியன் 4) ஔவையார்

17. நாம் கனம்பண்ண வேண்டிய பெரியோர்களில் முதன்மையானவர்
1) பெற்றோர் 2) கடவுள் 3) குரு 4) அதிபர்

18. "நன்றி மறவாமை" தொடர்பான கதையினை எழுதியவர்
1) அகத்தியர் 2) வியாசர் 3) தேவேந்திரன் 4) ஆறுமுகநாவலர்

19. எல்லா மதங்களும் ஒரே குரலில் அழுத்திக்கூறும் விடயம்
1) நீதி 2) நேர்மை 3) தருமம் 4) பொறுமை

20. "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" எனக் கூறியவர்
1) திருவள்ளுவர் 2) வியாசர் 3) ஔவையார் 4) தருமர்

(20 x 2 = 40 புள்ளிகள்)

**பகுதி - II**

❖ **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. 1) பின்வரும் திருமுறைப் பாடல்களுள் இரண்டினை வரிக்கிரமமாக எழுதி, பாடியவர் பெயர், தலம் என்பவற்றைக் குறிப்பிடுக.
2) உலகெலாம் உணர்ந்து.....
3) இடரினும் தளரினும்......
4) ஓசை ஒலியெலாம்....
5) பித்தாபிறை சூடி...... (1+1+8) x 2 = 20 புள்ளிகள்)

02. 1) விநாயகர் வழிபாடு இடம்பெறும் இடங்கள் மூன்று தருக.
2) சைவ இல்லங்களில் அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டிய பழக்கவழக்கங்கள் நான்கு தருக.
3) விநாயகரை வழிபடுவதால் கிடைக்கும் பயன்கள் மூன்று தருக.
4) சைவ மக்களின் விசேட தினங்கள் மூன்று தருக. (3+2+3+2= 10 புள்ளிகள்)

03. 1) திருநீறு அணியும் முறைகள் இரண்டையும் விளக்குக.
2) திருச்சிற்றம்பலம் கூறும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.
3) பாடசாலையில் கொண்டாடப்படும் சமய விழாக்கள் மூன்று தருக.
4) விசேட தினங்களின் போது கடைப்பிடிக்க வேண்டிய பழக்கவழக்கங்கள் நான்கு தருக.
(3+2+3+2= 10 புள்ளிகள்)

04. 1) நாம் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகள் நான்கு தருக.
2) பெரியோர் எனப்படுபவர் யாவர்?
3) உண்மை பேசுவதால் எமக்குக் கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக.
4) பெரியோர் முன்னால் தவிர்க்க வேண்டிய செயல்கள் மூன்று தருக. (3+2+3+2= 10 புள்ளிகள்)

05. 1) வாழ்வியல் சடங்குகள் என்றால் என்ன?
2) பின்வருவனவற்றின் மறுபெயர்களைக் குறிப்பிடுக.
அ) பெயர் சூட்டுதல்
ஆ) காது குத்துதல்
இ) சோறூட்டுதல்
ஈ) ஏடு தொடக்கல்
3) ஏடு தொடக்குதலின் முக்கிய நோக்கம் யாது?
4) பெயர் சூட்டும் சடங்கு எப்போது நடைபெறுகிறது? (2+4+2+2= 10 புள்ளிகள்)

06. பின்வருவனற்றில் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.
1) பெயர் சூட்டுதல் 2) நன்றி மறவாமை
3) ஏடு தொடக்குதல் 4) பெரியோரைக் கனம் பண்ணுதல்
(5 x 2= 10 புள்ளிகள்)